**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.415/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | இளங்கோவன் SSI 345 | Prosecution | LW- 3 as PW- 3 |
| Father Name | நடராஜன் | Defence | |
| Station | மயிலாடுதுறை PS | Taluk | மயிலாடுதுறை |
| District | மயிலாடுதுறை | Age | 59 /2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**24.03.2026 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் சீர்காழி காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது கடந்த 22.05.2018ம் தேதி இரவு 20.00 மணியளவில் சீர்காழீ பழைய பேருந்து நிலையம் அருகே SSI ராஜாராமன் மற்றும் கனகசுந்தரம் ஆகியோர்களுடன் ஆய்வாளர் சிங்காரவேல் அவர்களின் தலைமையில் ரோந்து செய்து கொண்டிருந்தோம். அப்போது அங்கே பிஜேபி கட்சி தலைவர் H. ராஜா, அகோரம், கருப்பு முருகானந்தம், வரதராஜன் ஆகியோர் தலைமையில் அவர்கள் கட்சிக்காரர்கள் கூட்டமாக சேர்ந்து ஒலிபெருக்கி மூலம் மற்ற மதங்களுக்கு எதிராக கோசம் எழுப்பிக்கொண்டிருந்தனர். இது சம்பந்தமாக 30(2) பிரிவின் கீழ் அமலில் இருந்தை மீறி அனுமதி பெறாமல் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படும் வகையில் ஆர்பாட்டம் செய்ததால் மேற்படி நபர்கள் மீது 20.05.2018ம் தேதி காலை 8.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

புகார் கொடுத்தது உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் என்றால் சரிதான். ராமச்சந்திரன் புகாரை கைப்பட எழுதி கொடுத்தாரா தட்டச்சு செய்து

கொடுத்தாரா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியது உண்மை என்றால் சரிதான். நான் என் முதல் விசாரணையில் 22.05.2018 தேதியன்று தான் சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை மேற்படி தேதியில் வழக்கு பதிவு தான் செய்யப்பட்டது. சம்பவம் அதற்கு முதல் நாள் தான் நடந்தது. நான் சம்பவ சமயத்தில் சீர்காழி காவல் நிலையத்தில் பணிபுரிந்ததற்கு சான்றாக ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த ராமசந்திரன் இவ்வழக்கின் சாட்சி பட்டியலில் சேர்க்கபடவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் கால கட்டத்தல் தடையானை உத்தரவு இருந்தது என்பதற்கு சான்றாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் பிஜேபி தலைவர்கள் ஒலிபெருக்கியில் சொன்னார்கள் என சொல்லவில்லை என்றால் தவறு பழைய பேருந்து நிலையத்தில் என குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக தனி நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் சீர்காழி காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். நான் காவல் துறையை சேர்ந்தவர் என்பதால் புகார்தாரரன காவல் துறையை சேர்ந்தவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆளும் கட்சியின் அழுத்தம் காரணமாக இந்த வழக்கில் பொய்யான சங்கதிகள் குறிப்பிடப்பட்டு FIR போடப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரர் காவல் துறையை சேர்ந்தவர் என்பதால் அவருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.**